# புலிகளின் உறுதியை பெறவே யாழ். செல்கிறேன்

## தொண்டமான் தகவல்

[கொழும்பு]
"எனது யோசனைக்கு விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உறுதியைப் பெறவே நான் யாழ்ப்பாணம் செல்லவிருக்கிறேன்" என்று அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 மார்கழி 22 இதழ்: 327
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 6-1-1992

## சிறிமா, ஜெயசூரியாவுடன் பேசுவார்

(கொழும்பு)
இனப்பிரச்சனை தீர்வு தொடர்பாக தான் முன் வைத்துள்ள யோசனைகள் தொடர்பாக அமைச்சர் திரு. தொண்டமான் எதிர்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, முன்னாள்

(4ம் பக்கம் பார்க்க)

### கொக்கட்டிச்சோலை சம்பவம்:

## இறுதி விசாரணைகளில் அறுபது பேர் சாட்சி

(மட்டுநகர்)
கொக்கட்டிச்சோலை படுகொலைச் சம்பவங்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி விசாரணைகளுக்கு அறுபது பேருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

[4-ம் பக்கம் பார்க்க]

### மனித உரிமை மீறல்; சிவில்யுத்தம் குறித்து

# உதவி வழங்கும் நாடுகளின் தூதுவர்கள்

# இல. அதிகாரிகளுடன் பேசுவர்

## நாளை கொழும்பில் விசேட கூட்டம்

(லண்டன்)
இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளைச் சேர்ந்த தூதுவர்கள் நாளை செவ்வாய்க்கிழமை கொழும்பில் திறைசேரி அதிகாரிகளை சந்தித்து பேசவுள்ளனர். மனித உரிமை மீறல்கள், வடக்கு கிழக்கில் இடம்பெற்றுவரும் சிவில் யுத்தம் குறித்து இலங்கை திறைசேரி அதிகாரிகளுடன் இந்த வெளிநாட்டுத் தூதுவர்கள் முக்கியமாக பேசுவார்கள் என்று தெரியவருகிறது.

அடுத்த மாதம் 7-ம் திகதி நடைபெறவிருக்கிறது. பாரிஸில் நடைபெறவிருக்கும் இந்த வருடம் உதவி வழங்கும் நாடுகளிடமிருந்து இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு இலங்கை 86 கோடி டொலர் முன்னோடியாக இச்சந்திப்பு அமை உதவித் தொகையாக வும், நன்கொடையாகவும் எதிர்பார்க்கின்றது.

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் குறித்த

[4ம் பக்கம் பார்க்க]

## 100ரூபாநோட்டில் தமிழ்க் கொலை

(கொழும்பு)
அண்மையில் இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட நூறு ரூபா புதிய நோட்டில் தமிழ்க் கொலை இடம் பெற்றுள்ளது. "நூறு ரூபாய்" என்பதற்குப் பதிலாக தமிழில் "நூறு ரூபாய" என குறிப்பிடப்பட்டிருக்கின்றது. (152)

## வடக்குக் கிழக்கில் 12 ஆயிரம் மக்கள் பலி

## 17 லட்சம் பேர் அகதிகள்

[கொழும்பு]
வடக்கு - கிழக்கு நிலைமையினுள் 1989 முதல் 1991 ஜூன் 24ம் திகதி யுத்த வரை மட்டும் 12 ஆயிரத்து ஜனவரி 215 பேர் இறந்துள்ளதாக புனர்வாழ்வு அமைச்சின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை வடக்கு கிழக்கில் 17 லட்சம் பேர் அகதிகளாகியுள்ளதுடன் இவர்களில் 9 இலட்சம் பேர் வெளி நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

## ஆதரவு தேடும் முயற்சியில் தமிழ் இயக்கங்கள்

(கொழும்பு)
இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சியில் அமைச்சர் தொண்டமான் முன்வைத்துள்ள ஆலோசனைகளுக்கு பெரும்பான்மையின அரசியல் கட்சிகளின் ஆதர

(4-ம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவையில் விரைவில் சிலமாற்றங்கள் ஏற்படும்

(கொழும்பு)
அமைச்சரவையில் இம்மாத நடுப்பகுதியில் சில மாற்றங்கள் இடம் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மாற்றத்தின்போது இரண்டு அல்லது மூன்று புது முகங்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்றும் தெரிய

(4ம் பக்கம் பார்க்க)

## ஓட்டோ சேவை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)
யாழ். நகரில் நேற்று ஓட்டோக்கள் மீண்டும் சேவையில் ஈடுபட்டன.

ஓட்டோ சாரதிகளுக்கு பாதுகாப்பு வழங்கப்படுமென்றும் பிரச்சனைக்குக் காரண

[4ம் பக்கம் பார்க்க]

# அமைதி நிலைபெற செய்வதே எனது முக்கிய லட்சியமாகும்! — ஜனாதிபதி

(மகரகம)
வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மீண்டும் அமைதியை நிலைபெறச்செய்து, இம்மாகாணங்களில் உள்ள அப்பாவிக் குடிமக்களுக்கு நிம்மதி அளிப்பதே தனது முக்கிய லட்சியமாகும் என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா தெரிவித்தார்.

மகரகமவில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேசிய விருது வழங்கும் வைபவத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ஆர். பிரேமதாசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ்நகரஎல்லைக்குள்நேற்று இறைச்சி விற்பனைத் தடை

(யாழ்ப்பாணம்)
யாழ். மாநகரசபை எல்லைக்குள் நேற்று இறைச்சி விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியில் உள்ள இறைச்சி வெட்டும் சாலையும் அதன் சுற்றுப்புறங்களும் மிக அசுத்தமாக இருந்ததைத் தொடர்ந்தே மேற்படி தடை விதிக்கப்பட்டது. (வி)

## ராமதாஸ், பண்ருட்டியுடன் 250 தொண்டர்கள் கைது!

(சென்னை)
பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் எஸ். ராமதாஸ் இக்கட்சியின் சட்டப் பேரவை உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் ஆகியோருடன் 250 கட்சித்

[4-ம் பக்கம் பார்க்க]

## மின்சார திருத்த வேலைக்கு மாங்குளம் நோக்கி விசேடகுழு பயணம்

[யாழ்ப்பாணம்]
மின்சாரத் திருத்த வேலை செய்வதற்கு, விசேட குழு ஒன்று கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் இருந்து மாங்குளம் சென்றுள்ளது.

மாங்குளம் பகுதியில் சேத

(4-ம் பக்கம் பார்க்க)

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் அனைத்தும் விடுமுறைக்குப் பின்னர் இன்று ஆரம்பமாகின்றன.

கல்வி அமைச்சின் அறிவித்தலின் பிரகாரம் 1992ம் ஆண்டில் பாடசாலைகளின்

(4ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு செலவு அதிகரிப்பினால் பங்கீட்டு முறை மீண்டும் அமுலுக்கு வரலாம்?

(கொழும்பு)
பாதுகாப்புக்கு அதிகமான நிதி ஒதுக்கப்படுவதால், இலங்கையில் இறக்குமதிக் கட்டுப்பாட்டு முறை, பங்கீட்டு

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## தாதிகள் தேவை

பயிற்சி பெற்ற/பயிற்சி பெற விரும்பும் தாதிகள் தேவை. தொடர்புகொள்க: Dr. இ. விக்னேஸ்வரராசா M.B.B.S. (Cey.), சென்றல் வைத்திய சாலை, பண்டத்தரிப்பு. (சி 5818)

## G.C.E. (O/L) '92

கணிதம்: திரு. ஸ்ரீதரன், விஞ்ஞானம்: திரு. தவமணிதாசன், 42/6, யாழ். இந்துக் கல்லூரி ஒழுங்கை, ஆரம்பம்; 6-1-92. (சி 5820)

## G. C. E. (A/L) PHYSICS

A/L பௌதீகம் அனுபவமுள்ள பட்டதாரி ஆசிரியரினால் வீடுகளிற்கு வந்து விளக்கமாகக் கற்பிக்கப்படும். தொடர்புகட்கு வசந்தம் புத்தகசாலை, 405, விரான்லி வீதி (புகையிரத நிலையத்திற்கு வடக்காக) யாழ்ப்பாணம். நேரம்: 12-30—1 30 வரை. (இ-5803)

## வைத்தியம்

தீவகத்தில் இயங்கிய பாக்கியம் குழந்தைகள் வைத்தியசாலை கல்வியங்காட்டிலிருந்து ஒரு மைல் தொலைவிலுள்ள இருபாலை சந்திக்கு இடமாற்றப்பட்டுள்ளது. (சி-5816)

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலைசூலைவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக் கசிவு, மூலவியாதிகளில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம், 121, 2ம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம் [சி-5809]

## அறிவுப் போட்டி

அஷ்டலக்ஷ்மி வாரத்தால் கலண்டரில் பொது அறிவுப் போட்டி பரிசு ரூபா 1000/-. விபரங்களை விற்பனையாளரிடம் அறிக. (சி 5805

## வரலாறு

விற்பனையாகின்றது. சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். வரலாறு-ஆண்டு II, வரலாறு-ஆண்டு 6. புதிய பாடத்திட்டத்திற்கு அமைய எழுதப்பட்டது. ஆக்கியோன்: ந. தர்மபாலன் (சமூகக்கல்வி ஆசிரிய ஆலோசகர்.) [சி-5808]

## தொழிற்பயிற்சிகள்

றேடியோ, T, Vs, வீடியோ டெக் றிப்பெயறிங், றீவைண்டிங், வயறிங், Engineering Drawing, Special Spoken English with Grammer, Motor Bicycle Watter pumb Mechaniciam, Computer programming ஆரம்பம்: 10-01-92, 11-01-92 விபரங்களுக்கு: Jaffna Technical Institute 52/1, விராண்லி வீதி, யாழ்ப்பாணம் (றெயில்வே கடவை அருகாமை மேல்மாடி) [எ-1835]

## கல்வி

புலமைப் பரிசில் வகுப்பிலிருந்து G.C.E. (O/L) வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 25 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் இலேசானதும், நுணுக்கமானதும், பலதரப்பட்டதுமான முறைகளில் 40 மணித்தியாலயத்திற்குள் விசேட சித்திக்குக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டுக்குளி. [சி-5859]

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

06-01-1991



அமரர் வித்துவான்
சரவணமுத்து கந்தையா
[இளைப்பாறிய ஆசிரியர் - தனங்கிளப்பு]

திதி: துவிதியை

ஆண்டொன்று சென்றாலும்
ஆறுதோ எம் துயரம்
மீண்டும் உமை நினைக்க
நெஞ்சம் கலங்குதையா
ஆறாத் துயரத்தில் எமை
இங்கு தவிக்கவிட்டு
மீளாத் துயில் கொள்ள
விண்ணுலகு சென்றீரோ.

உங்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

தனங்கிளப்பு,
சாவகச்சேரி. [எ 1817]

# தீவகத்தில் பெரும் உணவுத் தட்டுப்பாடு: வேலணையில் பசிக்கொடுமையால் இரு வயோதிப பெண்கள் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் உள்ள தீவகப்பகுதியில் தற்போது வாழ்ந்துவரும் பொதுமக்கள் பெரும் பட்டினிச் சாவை எதிர்நோக்கி வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வேலணைப் பகுதியில் கடந்த இருவாரங்களுக்கு முன் இரு வயோதிபப் பெண்கள் பசிக்கொடுமை தாங்கமுடியாமல் கிணற்றுள் வீழ்ந்து தற்கொலை செய்துகொண்டதாகத் தமக்குத் தற்போது செய்தி கிடைத்திருப்பதாக இறந்த பெண்ணின் உறவினரொருவர் தெரிவித்தார்.

தீவகப் பகுதிகளில் உள்ள ப.நோ.கூ. சங்கங்களிலிருந்த உணவுப் பொருள்களையே இராணுவத்தினர் இதுவரை அங்குள்ள பொதுமக்களுக்கு வழங்கி வந்துள்ளதாகவும் அப்பொருள்கள் தற்போது முடிவடைந்து வருவதனால் பொதுமக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை இராணுவம் வழங்கமுடியாது திண்டாடுவதினால் பொதுமக்கள் பெரிதும் கஷ்டப்படுவதாகவும் கூறப்படுகிறது.

காங்கேசன்துறைத் துறைமுகத்தில் இறக்கப்படும் உணவுப்பொருள்களை இராணுவத்தினர் தமது பாவனைக்கும் பயன்படுத்துவதாகவும், இதனாலேயே அங்கு பெரும் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் தற்போது தெரிய வந்துள்ளது. (வி)

★ தி. மு. கவிலிருந்து கோபாலசாமியை நீக்க

# கருணாநிதி எடுத்த முயற்சி படுதோல்வி அடைந்தது

(சென்னை)

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக திரு. வை. கோபால்சாமி செயற்படுவதாகக் கூறி அவரைக் கட்சியிலிருந்து நீக்க வேண்டுமென கலைஞர் கருணாநிதி உட்பட பல முக்கியஸ்தர்கள் கொண்டுவந்த தீர்மானம் படுதோல்வியடைந்துள்ளது.

வை. கோபால்சாமியின் சகோதரர் ரவிச்சந்திரன் புலிகளுக்குத் தன்வீட்டில் அடைக்கலம் கொடுத்ததற்காகக் கைது செய்யப்பட்டதிலிருந்து வை. கோபால்சாமியைக் கட்சியிலிருந்து நீக்குவதோடு ராஜ்ய சபை உறுப்பினர் பதவியை விலக்கிக்கொள்வதற்கும், எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு கோபால்சாமியின் ஆதரவாளர் காட்டிய பலத்த எதிர்ப்பையடுத்து அம்முயற்சி கைவிடப்பட்டது.

கட்சியின் பொதுச் செயலர் திரு. க. அன்பழகன் ரவிச்சந்திரன் செயலைக் கண்டித்து அறிக்கை விடுத்தார்.

வை. கோபால்சாமியை விலகும்படி கலைஞர் கருணாநிதி, திரு. டி. ஆர். பாலு மூலம் கேட்டுக்கொண்டார்.

தி. மு. க. இத்தகைய முடிவை எடுக்கக்கூடியபோது நாஞ்சில் மனோகரன் திரு. வை. கோ. மீது எடுக்கும் நடவடிக்கைகளைக் கடுமையாக எதிர்த்ததோடு வை. கோ. வைக் கட்சியை விட்டு நீக்கினால் மட்டும் 'தடா' சட்டம் தி. மு. க.வினர் மீது பாயாது என்பது என்ன நிச்சயம். இதுபோன்ற சமயத்தில் கட்சியின் முக்கிய பிரமுகர்களைக் கைகழுவுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது. அவர் மீது நடவடிக்கை எடுத்தால் தென்மாவட்டங்களில் கட்சியின் செல்வாக்குப் பலவீனமடையும் என வாதிட்டார்.

இதற்குப் பலத்த ஆதரவு கிடைக்கவே திரு. வை. கோ. மீது எடுக்கவிருந்த நடவடிக்கை கைவிடப்பட்டது.

## சம்பளம் வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

கடந்த ஒரு வருடமாக ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு, கல்லுண்டாய் போன்ற இடங்களில் வேலைசெய்த 350 உப்புக் கொம்பனி நிரந்தர ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படவில்லை.

## இராசி பலன்

06-01-1992
திங்கட்கிழமை
(தமிழுக்கு மார்கழி 21)

பிரதமை காலை 7-00வரை, உத்தராடம் மு. இ. 8-36 வரை, மரணயோகம், இராகு காலம் காலை 8-01 முதல் 9-31 வரை, சுபநேரம் பகல் 12-31 முதல் 2 01வரை.

மேடம்: சகோதரி நன்மை, குடும்பபெருமை, சித்தை நிமதி.

இடபம்: வருவாய் குன்றல், தொழில் பிணக்கு, பொய் பேசுதல்.

மிதுனம்; மூளைபோக்கு, மோசம் செய்தல், ஏமாற்றம்.

கடகம்: ஞானமார்க்கம், தேசசஞ்சாரம், பணவரவு.

சிங்கம்: இனசன உதவி, தெய்வதரிசனம், தொழில் முயற்சி.

கன்னி: பணத்தடை, கைப்பொருள் களவுபோதல், மனக்குறை.

துலாம்; குடும்பவிரோதம், அமைதிக்குறைவு, செலவு.

விருச்சிகம்: சுபகாரியம், எதிர்பாராத உறவு, காரிய சித்தி.

தனுசு: குடும்பக்கலவரம், அதிகாரபோட்டி, ஏமாற்றம்.

மகரம்: காரியம் கைகூடும், தொழில் மகிழ்ச்சி, புகழ்.

கும்பம்: தவறான செய்கை, மனைவியால் துயரம், பகை.

மீனம்: விடாமுயற்சி, பணிபாக உதவி, உல்லாசவாழ்வு.

— ஜோஸ்யர்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

(06-01-1992)



அமரர் மூ. சி. சோமசுந்தரம்
(குருநாகல் 'சோமாஸ்' தாபன முன்னாள் அதிபர்)

மலர்வு:
21-06-1925

உதிர்வு:
06-01-1991

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினரும்,
உறவினரும்.

ஸ்ரீ கணேச வாசம்,
வதிரி, அல்வாய். [இ 5827]

## சளி, சுரம் குழந்தை பலி

(யாழ்ப்பாணம்)

வளாய், இடைக்காடு குடியிலிருந்து இடம் பெயர்ந்து புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி அகதி முகாமில் தங்கியிருந்த ஆறு மாதக் குழந்தை ஒன்று சளி, சுரம் நோயினால் பீடிக்கப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு நேற்றுக்காலை மரணமானது.

புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியில் தங்கியிருந்த தவராசா சிவதர்ஸினி என்ற ஆறுமாதக் குழந்தையே மரணமானது. [56]

## "போரில் ஏற்பட்ட உணர்வுகள் கவிதை வடிவம் பெறுகிறது"

(யாழ்ப்பாணம்)

"உலகத்தில் பெண்கள் கடினமான வேலை செய்ய மாட்டார்கள் என்ற கருத்து நிலவுகிறது. ஆனால் எமது இயக்கத்திலுள்ள பெண் போராளிகள் தொழில் நுட்ப ரீதியில் பல முன்னேற்றகரமான செயல்களைச் செய்கிறார்கள்"

இவ்வாறு யாழ். பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற "வானதியின் கவிதைகள்" என்ற கவிதை நூல் வெளியீட்டு விழாவின்போது தமிழீழ விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணியின் செயலாளர் ஜெயா கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: எமது போராளிகளின் படைப்புகளுக்கு இலக்கணம், மரபு, யாப்பு ஒத்து வராது. நாங்கள் போராட்டத்தில் அனுபவித்த உணர்வுகளை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளும் நோக்கோடு தேசத்தின் குரலாகக் கவிதை வடிவமாக வெளிவருகின்றது.

இவ்வெளியீட்டு விழாவில் விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத் தலைவர் புதுவை இரத்தினதுரை, மகளிர் முன்னணியைச் சேர்ந்த செல்விகள் ஜெயா, மாலினி, கவிஞர் முருகையன், கோகிலா மகேந்திரன் ஆகியோர் கவிதை நூல் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்தார்கள்.

கப்டன் வானதியின் தந்தை சண்முகநாதபிள்ளை, கப்டன் கஸ்தூரியின் தந்தை கணேசன் தமது பிள்ளைகள் போராட்டத்தில் இணைந்து தாயகமீட்புக்காகப் போரிட்டு மாவீரர்களானதையிட்டு மகிழ்வடைவதாகக் குறிப்பிட்டார்கள்.

புத்தக வெளியீட்டு விழா செல்வி பாரதியின் தலைமையில் நடைபெற்றது. [152]


# பற்றீஸியன்

## தொழிற் பயிற்சி நிறுவனம்

# Patrician Institutes

## தொழினுட்ப பயிற்சி நெறிகள் புதிய பிரிவுகள் ஆரம்பம்

(1) COMPUTER PROCESSING COURSES

(I) Computer Processing in Basic Language and disk Operating System (M. S. DOS)
Duration - 4 Months Commencing 08-01-1992

(II) Word Processing and M. S. DOS (Word Star - 4000)
Duration: 3 months Commencing 10-01-1992

★ Week day Classes (Theory & .Practicals)
★ Lectures by - Mr. S R. LOGENDRA D. C. A. (Systems Analyst)

(III) d BASE III PLUS and MS-DOS
Duration: 4 months

(IV) LOTUS 1-2-3 (Spread sheet Analysis) and MS DOS
Duration: 4 months

★ Commencing: 11-01-1992 (Weekend Classes-Theory & Practicals)
★ Lectures by: Mr. J. LEOYD B. Se. Post graduate Dip in Comp. Technology
★ Equipment used LASER XT/2, XT/3, 386 and BIT Comp. Computers (IBM Compaitibles)
★ Qualification: G. C. E. (O/L)

பின்வரும் பயிற்சி நெறிகள் எதிர்வரும் 20-01-1992 திங்கட்கிழமை ஆரம்பமாகும்:

(2) CIVIL DRAUGHTSMANSHIP COURSE

Course covers:

(i) Draughtsmanship
(ii) Engineering Drawing
(iii) Building Construction
(iv) Civil Enigneering materials
(v) Building quantity

Duration: 6 months; Quailfication; G. C. E. (O/L)

(3) City & guilds of London Examination: (year 92/93)
ELECTRICAL ELECTONIC ENGINEERING TECHNICIAN
PART I & II

Subjects; (i) Engineering Science & Circuits
(ii) Power
(iii) Electronic

QUALIFICATION: G C. E (O/L)

PART III

Sujbects:
(1) Advance Electrical Technology
(2) Generation Transmission & Distribution of Electrical Energy

Qualification: PART II சித்தி எய்தியோர் மட்டும்
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
Lectures by: Experienced Engineers

(4) SPECIAL ENGLISH CLASSES
இலக்கணத்துடன் க. பொ. த. (சா/த) மற்றும் சகல பரீட்சைகளுக்கும் ஏற்ற வகையில் மிகக் குறுகிய காலப் பயிற்சி நெறிகள் நடைபெறும்;

(5) SHORT - HAND & TYPING (ENGLISH) — (தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும்)

(6) MOTOR MECHANISM - மோட்டார் வாகனம் திருத்துதல் காலம்-(6 மாதங்கள்)

(7) MOTOR WINDING - மோட்டர் வைன்டிங் காலம்-(4 மாதங்கள்)

(8) ELECTRICAL WIRING - மின்சார இணைப்பு காலம்-(3 மாதங்கள்)

(9) GENERAL ELECTRICIAN - ஜெனரல் எலக்ரீசியன் காலம் (4 மாதங்கள்)

இதில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடத் திட்டங்கள்:

(i) அடிப்படை மின்சாரம் (AC / DC) — Basic Electricity
(ii) மோட்டர்வைன்டிங் — Motor Winding
(iii) ஆமச்சர் வைன்டிங் — Armature Winding
(iv) டிரான்ஸ்போமர் வைன்டிங் — Transformer Winding
(v) வீட்டு மின் இணைப்பு — House Wiring
(vi) எல்லாவிதமான மின்உபகரணங்களும் பழுது பார்த்தல், இயக்குதல் — Repairing of all type of Electrical Equipments

விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

மேலதிக விபரங்களுக்கு:

பதிவாளர்
பற்றீஸியன் இன்ஸ்ரிரியூட்ஸ்,
இல; 59, சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

REGISTRAR,
Patrician Institutes of Higher Studies,
59, St. Patrick's Road
Jaffna.

[ஏ-1834]


## அரசுக்கு எதிராக பாதயாத்திரை

(கொழும்பு)

அரசாங்கத்தின் தனியார் மயமாக்கல் கொள்கையால் 'வேலையிழந்தோர் சங்கம்' கொழும்பில் இருந்து கதிர்காமத்துக்கு பாதயாத்திரை ஒன்றை நடாத்தவுள்ளது.

பாதயாத்திரை பெப்ரவரி முதலாம் திகதி ஆரம்பமாகும். 6000க்கும் அதிகமான சங்க உறுப்பினர்களும் எதிர்க்கட்சியாளரும் இப்பாதயாத்திரையில் கலந்துகொள்ளவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## அரசு றேகணகுடும்பத்திற்கு பாதுகாப்பு அளித்துள்ளது

(லண்டன்)

றேகண விஜேவீராவின் மனைவியையும் 5 பிள்ளைகளையும் இலங்கை அரசு தடுப்புக் காவலில் வைத்துள்ளதாக கடந்த வாரம் ஜே. வி. பி.யின் தற்போதைய தலைவர் சோமவன்ச அமரசிங்க கூறியதை ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் மறுத்துள்ளார்.

அவர்களின் பாதுகாப்பு நிமித்தம், அரசு அவர்களை பாதுகாத்து வைத்துள்ளதே ஒழிய கைது செய்து தடுப்புக் காவலில் வைத்துள்ளதென்ற கூற்று தவறானதுஎன்றும் திரு. வீரக்கோன் கூறினார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமோ வேறு எவருமோ அவர்களை விடுவிக்கும்படி கோரிக்கை விடவில்லை. அப்படியான ஒரு கோரிக்கை விடும் பட்சத்தில் அதுபற்றி அரசு பரிசீலிக்கும் என்றார். (மா)

## கர்நாடகதமிழ் அகதிகளுக்கு நஷ்டஈடு வழங்க ஏற்பாடு

(சென்னை)

காவிரி நீர்ப் பிரச்சினையில் தமிழக மக்கள் கடைப்பிடித்த பொறுமைபோல் கர்நாடக மக்கள் பொறுமையைக் கடைப்பிடிக்கத் தவறிவிட்டனர் என்று மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் கன்னட மக்களைக் குறை கூறியுள்ளார்.

தமிழக மக்களும், கர்நாடக மக்களும் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். கர்நாடகத்திலிருந்து பாதிக்கப்பட்டு தமிழ்நாடு வந்த தமிழர்களுக்கு நஷ்டஈடு வழங்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

தமிழகம் இப் பிரச்சினையில் எழுந்த ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்திவிட்டது. ஆனால் கர்நாடகமோ அப்படிச் செய்யத் தவறிவிட்டது.

காவிரி நீர்ப் பிரச்சினையை இரு மாநிலங்களும் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்வதே சிறந்த செயலாகும் என்றார்.

கிரிக்கெட்

## 206 ஓட்டங்கள் ரவிசாஸ்திரி

(சிட்னி)

இந்தியாவுக்கும், அவுஸ்திரேலியாவுக்குமிடையில் சிட்னியில் நடைபெறும் 3-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் 4ஆம் நாள் ஆட்டம் முடிவடையும்போது இந்தியா 7 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 437 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ரவிசாஸ்திரி சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 206 ஓட்டங்களைப் பெற்றார்; அவுஸ்திரேலியாவில் இரட்டை "செஞ்சரிகளை" பெற்ற முதலாவது இந்திய வீரர் என்ற புகழையும் பெற்றார்.

இளம் துடுப்பாட்ட வீரர் சிந்துல்கர் ஆட்டமிழக்காமல் 115 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

4ஆம் நாள் நேரீர் இடைவேளையின் பின்பு மழை காரணமாக இடைநிறுத்தம் செய்தபோது, இந்தியா முதல் இன்னிங்ஸில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 437 ஓட்டங்களையும், அவுஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 313 ஓட்டங்களையும் பெற்றிருந்தன. (வி)

## பொதுக்கூட்டம்

(வட்டுக்கோட்டை)

காரைநகர் மத்திய பிரிவில் உள்ள சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் பொதுக்கூட்டம் இம்மாதம் 9ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1-30 மணியளவில் தொல்புரம் சமநலசேவை நிலையத்தில் நடைபெறவுள்ளது. (139)

# யாழ். செல்ல ஜனாதிபதியின் அனுமதி தேவையில்லை-தொண்டா

(கண்டி)

தற்போது என்னால் வைக்கப்பட்டிருக்கும் அரசியல் தீர்வு இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் திட்டமாகும். நான் எனது கட்சியின் தலைவர் என்ற முறையில் இத் தீர்மானத்தை தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் கலந்தாலோசிப்பதற்கும் அவர்களுடைய கருத்துக்களை கேட்டறியவும் யாழ்ப்பாணம் செல்லவுள்ளேன்.

இவ்வாறு கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி உல்லாசத்துறை அமைச்சர் தொண்டமான் கண்டி குயின்ஸ் ஹோட்டலில் உள்ளூர் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நான் இந்த அரசில் ஒரு அமைச்சர் என்ற வகையில் அரசின் யோசனையாக இருந்தால் ஜனாதிபதியிடம் அனுமதி பெற்றே செல்ல வேண்டும். ஆனால் எமது கட்சியின் அரசியல் தீர்வான யோசனையை விடுதலைப் புலிகளுடன் கலந்தாலோசிக்க ஜனாதிபதியிடம் அனுமதிபெற தேவையில்லை என்றார்.

## கொக்கட்டிச்சோலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இறுதி விசாரணைகள் இம் மாதம் 9ம், 10ம், 11ம் திகதிகளில் மட்டக்களப்பு விமான நிலைக் கட்டிடத்தில் நடைபெறவிருக்கின்றன. (ரி)

## சிறிமா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் திரு. காமினி ஜெயசூரியா ஆகியோருடன் அடுத்த வாரமளவில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இந்த யோசனைகள் தொடர்பாக கண்டி மகாநாயக்க வெனத்த குருமாருடன் பேசுக நடத்தியுள்ள திரு. தொண்டமான், ஏனைய வெனத்த குருமாருக்கும் விளக்கம் அளிக்கும் முயற்சிகளில் தற்போது ஈடுபட்டுவருகிறார். (ரி)

## புலிகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளார்.

தனது அமைச்சில் நடத்திய பத்திரிகையாளர் மகாநாடு ஒன்றிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்:

அவர் மேலும் அங்கு தெரிவிக்கையில் கூறியதாவது; "எனது யோசனையைத்தான் புலிகள் இயக்கத்தினர் அடிப்படையாகக் கொண்டு ஆலோசனை நடத்த வேண்டுமென நான் கூறவில்லை. எனது யோசனையை எதிர்ப்பவர்கள் யாரும் மாற்று யோசனையை முன்வைக்கவில்லை.

நான் முன்வைத்த யோசனைகளை இதுவரையும் எந்த அரசியல் கட்சிகளும் எதிர்க்கவில்லை. இதனை முழுமையாக வாசித்து புரிந்து கொள்ளாதவர்களே எதிர்க்கின்றனர்

நவசமசமாஜக்கட்சி, ஸ்ரீல. மக்கள் கட்சி, ஸ்ரீல. முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன எனது யோசனையை ஆதரிக்கின்றன. ஜனாதிபதி கூட எனது யோசனையை எதிர்க்கவில்லை இது தொடர்பாக எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் நாளை எனக்கு ஆதரவளிப்பார்கள் என்ற நம்பிக்கையுண்டு. (ரி)

## ஓட்டோ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்களுக்கு எதிராக பாரபட்சமற்ற விசாரணை நடாத்தப்படுமென்றும் உத்தரவாதமளிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஓட்டோ சாரதிகளின் பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது.

நேற்று நண்பகலுக்குப் பின்பு ஓட்டோக்கள் தமது வழமையான சேவையை ஆரம்பித்தன. (வி-க-56)

## அமைச்சரவையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறது.

முன்னாள் அமைச்சர்கள் லலித் அத்துலத்முதலி (கல்வி) ஜி. எம். பிரேமச்சந்திரா (தொழில்) ஆகியோரின் பதவி துறப்பால் ஏற்பட்ட இரு அமைச்சரவை வெற்றிடங்களும் இம் மாற்றத்தின்போது நிரப்பப்படும்.

உத்தேச அமைச்சரவை மாற்றத்தில் சில இராஜாங்க அமைச்சர்கள் திட்ட அமைச்சர்களாக பதவி உயர்த்தப்படவிருக்கிறார்கள். (ரி)

## மின்சாரதிருத்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மடைந்துள்ள மின்கோபுரங்களை இக்குழுவினர் முற்றாகத் திருத்தம் செய்த பின்னர் முதலில் கிளிநொச்சிப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படும் என்றும், இத்திருத்த வேலைகள் அடுத்த மாத நடுப்பகுதியில் முடிவடைந்துவிடும் என்றும் மேற்படி குழுவின் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கிளிநொச்சிப் பகுதியில் திருத்த வேலைகள் முற்றாக முடிவடைந்த பின்னரே யாழ்ப்பாணத்திற்கு மின்சார விநியோகிப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். [வி]

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க கலந்துரையாடல் கீழ்க்காணும் கால நேர அட்டவணைப்படி நிகழவிருப்பதால் அவ்வவ் பிரிவு மாணவர் இயக்க உறுப்பினர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர் என்று விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அறிவித்துள்ளது.

இன்று 6-ம் திகதி மாலை 4-00 மணிக்கு வலிகாமம் இராமநாதன் கல்லூரி மகுத மண்டபம், நாளை 7-ம் திகதி மாலை 4-00 மணிக்கு வடமராட்சி நெல்லியடி மகா வித்தியாலயம், எதிர்வரும் 10-ம் திகதி மாலை 4-00 மணிக்கு தென்மராட்சி சாவகச்சேரி இந்துக்கல்லூரி

## மனித உரிமை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தும், இவ் யுத்தம் குறித்தும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் தூதுவர்கள் தீவிர அக்கறை செலுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1987—1989 காலப்பகுதியில் இலங்கையில் சுமார் 60 ஆயிரம் இளைஞர்கள் காணமற்போயும் இறந்துமுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## ஆதரவு தேடும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வைப் பெறும் முயற்சியில் தமிழ் இயக்கங்கள் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் தொண்டமானின் முயற்சி குறித்து பெரும்பான்மை இனமக்களிடையே அதிருப்தி நிலவுவதை யடுத்தே தமிழ இயக்கங்கள் மேற்படி நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாகவும் கூறப்படுகிறது. (க)

## அமைதி நிலைபெற

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில்; இனப் பிரச்சினைத் தீர்வுக்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழுவிடம் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான தமது சிபாரிசுகளை சமர்ப்பிக்கலாம்.

சகல மக்களையும் ஐக்கியப்படுத்தும் புதியதிட்டமொன்று தற்பொழுது நடைமுறைப்படுத்தப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார். (ரி-க)

## பாடசாலைகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தவணைகள் பின்வருமாறு அமையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலாம் தவணை: ஜனவரி 2ம் திகதில் இருந்து ஏப்ரல் 3ம் திகதி வரை.

இரண்டாம் தவணை: மே 4ம் திகதி முதல் யூலை 31ம் திகதி வரை.

மூன்றும் தவணை; ஆகஸ்ட் 31ம் திகதி முதல் டிசம்பர் 1ம் திகதி வரை. (சு)

## ராமதாஸ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொண்டர்கள் நேற்று தமிழக பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

நேற்றுக்காலை தர்மபுரியிலிருந்து பெங்களூருக்கு செல்லும் வழியில் டாக்டர் ராமதாசும், கட்சித் தொண்டர்களும் திடீரெனக் கைதுசெய்யப்பட்டார்கள்.

இதேவேளை சட்டப்பேரவை உறுப்பினரான திரு: பண்ருட்டி ராமச்சந்திரன் தர்மபுரிக்கு அருகில் வைத்து கைதானார்.

காவிரிநீர் பிரச்சினை தொடர்பாக ஊர்வலம் நடத்திய போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

ஜி.ஜி. யின் பாரியார்

## காலமானார்

(கொழும்பு)

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் பாரியார் திருமதி அழகுமணி பொன்னம்பலம் (86 வயது) கடந்த வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

காலம்சென்ற அழகுமணி பொன்னம்பலம் மலேசியா-இலங்கை நட்புறவுச் சங்கத்தின் தலைவி என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## விடுதலை

(ஊர்காவற்றுறை)

வவுனியாவில் இருந்து பற்றி கொண்டுவரும்போது. முஸ்லிம் ஒருவரால் காட்டிக் கொடுக்கப்பட்ட காரைநகர் இளைஞர் ஒருவர் கொழும்பில் சிறைவைக்கப்பட்டு, 115 நாட்களின் பின்னர் சு தந்திரமாக விடுவிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. (59)

## தொண்டமான் 17ந்திகதிவருவார்

(கொழும்பு)

அமைச்சர் திரு. தொண்டமான் இம்மாதம் 17ந் திகதி, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த, யாழ்ப்பாணம் செல்வார் என 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## கட்டுநிதிவரவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்துக்கு டிசம்பர் மாதத்திற்கான ஓய்வூதியம் வந்தபோதிலும், கட்டுநிதி வந்து சேரவில்லை எனத் தெரியவருகிறது.

## பாதுகாப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முறை மீண்டும் அமுலுக்கு வரலாமென அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

1977ம் ஆண்டில் பாதுகாப்புச் செலவு, 50 கோடியாக இருந்தது. 1987ம் ஆண்டு வரையான 10 வருடகாலத்தில் 1,000 கோடியாக உயர்ந்துள்ளது. 1990 ஆண்டு 1,500 கோடியாக இத்தொகை உயர்ந்துள்ளதுடன், எதிர்காலத்தில் மேலும் பாதுகாப்புச் செலவு அதிகரிக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்புச் செலவினத்தை காட்டி உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் உதவி வழங்கும் நாடுகள், தாங்கள் இலங்கைக்கு வழங்கும் உதவிகளை குறைக்கப் போவதாக எச்சரித்து வருகின்றன. இதனால் பொருளாதார ரீதியாக இலங்கைக்கு நெருக்கடிகள் வரலாம் என மேலும் தெரிவிக்கப்படுகிறது. (152)


## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

செ. இரத்தினசிங்கம்

(ஓய்வுபெற்ற நில அளவையாளர்)

தோற்றம்: 17-03-1924 மறைவு: 12-01-1986

திதி: 06 01-1992

பண்பின் சிகரமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
அமைந்து எம்மை எல்லாம் நேர்வழியில் நடத்திய
எம் அன்புத் தெய்வமே நீர் மறைந்து,
ஆண்டுகள் ஆறு சென்றாலும் ஆறாது எம்மனம்.

அன்புத் தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தி அடைய
ஆண்டவனை வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள்,
மாமி, மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

532, கே. கே. எஸ். வீதி,
தட்டாதெரு சந்தி,
யாழ்ப்பாணம்.

(ஏ 1837)



## முக்கிய அறிவித்தல்

அசல் ஆர். வி. ஜி. பீடிகளைப்போல் ஒரு சில நபர்கள் தரத்திலும் விலையிலும் குறைந்த போலி ஆர். வி, ஜி. பீடிகளை விற்பனை செய்வதாக அறியவந்துள்ளோம். அசல் ஆர். வி. ஜி. பீடியின் விலையில் மாற்றம் எதுவும் இல்லை.

குறைந்த விலையில் போலி ஆர். வி. ஜி. பீடிகளை விற்பனை செய்பவர்களை இனம் கண்டு எமக்குத் தகவல் தருமாறு பீடி விற்பனையாளர்களை அன்புடன் வேண்டுகிறோம்.

இதமான, சுவையான புகை இன்பத்திற்கு அசல் ஆர். வி. ஜி. பீடிகளை கேட்டு வாங்கிப் பாவியுங்கள்.

ஆர். வி. ஜி. நிர்வாகம்.
58, குறுக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(சி-5814)



இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் விதாயனத்தாரால் யாழ்ப்பாணம் இலவ்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஜனவரி மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/81.